மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

199—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***51059—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர், பாலமேடு பகுதிகளிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து அங்கன்வாடி மையக் கட்டடங்களையும் மாற்றியுள்ளார்கள். தற்போது 15,313 மையங்களைக் கண்டறிந்து, அவற்றுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக 601 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். அலங்காநல்லூர் வட்டாரத்தில் 11 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றுள், அலங்காநல்லூர் பகுதியில் சுந்தர்ராஜபுரம் மற்றும் ரோஜாநகர் ஆகிய இரண்டு மையங்களுக்கும், பாலமேடு பகுதியில் மீனாம்பாள்புரம், மஞ்சமலை நகர், நாடார் தெரு ஆகிய மூன்று மையங்களுக்கும் இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

2015 செப்டம்பர் 2]

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதியான தமிழகம்-மாண்புமிகு அம்மா அவர்களுடைய இலட்சியம் உயர்வானது; வளமான தமிழகம்-மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வை தெளிவானது; ஏழை, எளியோரின் வளர்ச்சியான தமிழகம்-மாண்புமிகு அம்மா அவர்களுடைய வெற்றியில் முடிவானது; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழைச் சொல்லி, தமிழர்களைச் சொல்லி, எதற்கும் அரசியல் ஆதாயம் தேடுவோர் மத்தியில் தமிழர்களின் வாழ்வாதார உரிமையான காவேரி, முல்லைப் பெரியாறு, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் ஆகிய பிரச்சினைகளில் பெற்ற இமாலய வெற்றிகளைத் தொடர்ந்து, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் கச்சத் தீவு, ஜல்லிக்கட்டு ஆகிய பிரச்சினைகளைத் தீர்க்க மனு வழங்கி, தாழ்ந்திருந்த தமிழகத்தை இந்த நான்கு ஆண்டுகளில் தலை நிமிர வைத்திட்ட வாழும் மனித தெய்வம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 10-20

எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தன. அவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றது என்று இந்த அவையில் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வாடிப்பட்டி மற்றும் சோழவந்தான் பகுதிகளில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, மதுரை மாவட்டத்தில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் மொத்த மையங்களின் எண்ணிக்கை 321. அதில் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், அலங்காநல்லூர் வட்டாரத்தில் மட்டும் 13 மையங்கள் கட்டப்பட இருக்கின்றன.

ஆனால், அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு பகுதிகள் எல்லாம் பேரூராட்சிப் பகுதிகளாக இருக்கிற காரணத்தினால், இடம் தேர்வு செய்வதில் கொஞ்சம் சிரமம் ஏற்படுகிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற வாடிப்பட்டி பகுதியிலும் இடம் தேர்வு செய்யக்கூடிய பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினரும், இடம் தேர்வு செய்வதில் அரசுக்கு ஒத்துழைப்பாரேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்ற பகுதிகளில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

200—

தானிய சேமிப்புக் கிடங்கு

***53375 திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, மேல்வளையமாதேவி ஊராட்சியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு தானிய சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, மேல்வளையமாதேவி ஊராட்சியில் உள்ள வளையமாதேவி மேல்பாதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 1976 ஆம் ஆண்டு 1,181 சதுர அடியில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்பட்டு, தற்போது உரக் கிடங்காகச் செயல்பட்டு வருகின்றது. மேலும், 1990 ஆம் ஆண்டு, 1,355 சதுர அடியில்